வலியுறுத்துவதோடு, முன்பு எப்படியிருந்தாலும், ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இப்போது அரிசனங்களுக்குக்கூட ஆகமப் பயிற்சி அளித்து, அர்ச்சகர்களாக்குகிற ஒரு திட்டத்தை நடத்திக் கொண்டு வருகிறார் என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : இந்த நீண்ட உரையிலே, தலைவர் அவர்களே, கேள்வி எது என்பதைச் சுருக்கமாகத் தாங்களாவது சொல்ல வேண்டும். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதுதான் இலக்கியப் பேருரை ஆற்றிக் கொண்டிருக்கிறார். அதிலே நான் கூட நெக்கு நெக்கு உருகிப் போனேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்ன கருத்துக்கள் அரசுக்குத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உரிமம் இல்லாமல் பாம்புத் தோல் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை.

20*—(வினா எண் 231)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் 1988—89-ல் வனவிலங்கு பாது காப்பு அதிகாரிகளால் உரிமம் இல்லாமல் பாம்புத் தோல் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, (அ) சென்னையில் 1988—89-ல் உரிமம் இல்லாமல் பாம்புத் தோல் வைத்திருந்ததாக 12 பேர் கைது செய்யப் பட்டனர்.

(ஆ) கைது செய்யப்பட்டவர்கள் 15 நாட்கள் காவலில் வைக்கப்பட்டு பிறகு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, பாம்புத் தோல் வைத்திருப்பதற்கு உரிமம் தேவையென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இப்போது கிராமங்களில் அதிகமாக பாம்புகள் பெருகி மக்களின் உயிர் போகிற அளவிற்குத் தொல்லை ஏற்படுகிற சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே பாம்பு பிடிப்பதற்குக் கிராமங்களில் இருப்பவர்களுக்குத் தனியாக உரிமம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, பாம்பு இனங்களை அழிக்கக்கூடாது என்ற வகையிலே 1986 ஆம் ஆண்டு மத்திய அரசால், இது Circu rent Subj c என்ற காரணத்தால், தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டு அப்போதிருந்த அரசு இந்தத் தொழில் செய்யலாம் என்ற சட்டத்தை பிறப்பித்தது. ஆனால் மத்திய அரசு 1986-லே இதைத் தடை செய்து, சட்டம் பிறப்பித்துவிட்ட காரணத்தால், இன்றைக்கு மாநில அரசு அதற்கான உரிமம் வழங்க முடியாத நிலைமையில் இருக்கிறது.

(முற்பகல் 9-20).

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதனுடைய அத்தியாவசியமான நிலைமையை அரசு உணர்ந்து காரணம் இன்றைய தினம் கிராமங்களிலே இது ஒரு பெரிய பூதாகரமான பிரச்சினையாக இருக்கிறது. கிராமங்களிலே அன்றாடம் இதற்குப் பலியாகின்றார்கள் என்பதால், நம்முடைய அரசு மத்திய அரசுக்கு எழுதி, கிராமங்களிலே இருளர் போன்ற பாம்பைப் பிடிக்கின்ற இன மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இதை வழங்கி, பிடிப்பதற்கு அரசு இனியாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இங்கே தங்களுடைய கவனத்திற்கு நான் ஒரு கருத்தை வைக்க விரும்புகிறேன். சாரைப் பாம்பு போன்ற இப்படிப்பட்ட பாம்புகளைப் பிடிப்பதினாலே, அந்தப் பாம்பு இனம் அழியுமா அல்லது பெருகுமா என்பதிலே இருவகையான கருத்துக்கள் இருக்கின்றன. நம்முடைய வனத் துறையைப் பொறுத்தவரையில் இதனால் பாம்புகளின் இனம் அழியும் என்ற ஒரு கருத்தைக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இதிலே வர்த்தகர்களாக இருப்பவர்கள் இது அழியாது, இதனால் பாம்பு இனம் பெருகும் என்ற ஒரு கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். ஏன் என்றால்,

1989 ஏப்ரல் 3] மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி

சாரைப் பாம்பு 50 அல்லது 60 முட்டைகளை இடுகிறபோது அந்த முட்டைகளை மீண்டும் தின்றுவிடுவதினாலே—பாம்பைக் கொல்லாவிட்டால் அத்தனை முட்டைகளையும் தின்றுவிடும்— அப்படியே போகப் போக பாம்பு இனம் அழிந்துவிடும் என்பது அவர்களுடைய கருத்து. ஆனால் இந்தக் கருத்து சரியில்லை என்று நம்முடைய வனத் துறையைச் சேர்ந்தவர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இதற்கு இந்தத் துறையில் இருக்கக் கூடிய வல்லுநர்களின் கருத்தைக் கேட்டு, அதற்குப் பிறகு மத்திய அரசோடு தொடர்புகொண்டு நிச்சயமாக பாம்பு இனம் இதனால் பெருகுமானால், தொழிலும் நமக்குப் பெருகும், நிச்சயமாக, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பாம்புத் தோல் உரிமம் இல்லாமல் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு விஷயத்தில், சிறைக் கண்காணிப்பாளர் ஒருவர் ஈடுபட்டு, திருச்சியிலே சுங்க இலாக்காவில் ஒரு அதிகாரியாக இருந்த தன்னுடைய சகோதரியின் உதவியோடு, அவர், அதை ஏற்றுமதி செய்ய முயன்றதற்காக கைது செய்யப்பட்டு இருந்தார். அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல் வெறும் 15 நாட்கள் ரிமான்ட் மட்டும்தானா; டிபார்ட்மென்ட் என்ன நடவடிக்கை எடுத்தது ? கோர்ட் என்ன நடவடிக்கை எடுத்தது ? அவருடைய சகோதரி மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவலின்படி, 12 பேர்களுடைய பெயர்கள் இருக்கின்றன. அதிலே திருச்சியைச் சேர்ந்தவர் இருக்கிறாரா என்பதை என்னால் அறிய முடியவில்லை. இதுபற்றி தனியாகக் கேள்வி எழுப்பினால், நான் பதில் தருகிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே பாம்புத் தோல் ஏற்றுமதி செய்யும் உரிமம் பலருக்கு வழங்கப்பட்டால் கிராமங்களிலே பாம்பு இனம் அழியுமா என்று இங்கே கேள்வி கேட்கப்பட்டது. பாம்புக் குணம் படைத்த பல பேர்கள் இன்றைக்கு மனித உருவிலே தமிழகத்திலே இருக்கிறார்களே, அவர்களைப் பிடிப்பதற்குத் தமிழக அரசின் சார்பாக ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, பாம்பு இனத்தை அழிக்கவேண்டும் என்று உரிமம் கேட்கவில்லை. பாம்புப் பிடிப்பது, அதனுடைய தோலை உரித்து, அதை ஏற்றுமதி செய்வதற்குத்தான் உரிமம் கேட்கிறார்கள்.

திரு. டி. சி. விஜயேந்திரையா : தலைவர் அவர்களே, ஊர்களில் தொல்லை கொடுத்துக் கொண்டு இருக்கும் குரங்குகள் எல்லாம், வன இனங்களோடு, சேர்ந்தது என்று வன பாதுகாவலர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் ஊர்களில் இருக்கும் குரங்குகளை, பஞ்சாயத்தில் இருந்து பிடித்தோ, அல்லது வேறு தனி மனிதர் பிடித்தோ, கொண்டு போய் காட்டில் விடும்போது, ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டு இருக்கிறது. அதை நான் சொல்ல விரும்புகிறேன். சில ஊர்களில் அந்தக் குரங்குகளைப் பிடித்துக் கூண்டில் அடைத்துக் கொண்டு போய் காட்டில் விடும்போது, அங்கிருக்கும் காட்டு அதிகாரிகள் அவர்களைப் பிடித்து, நீங்கள் எங்கள் காட்டிலிருக்கும் குரங்குகளைத் திருட்டுத்தனமாக பிடித்துக் கொண்டு போகிறீர்கள் என்று உங்கள் பெயரில் கேஸ் போடுவோம் என்று வற்புறுத்துகிறார்கள். அந்தக் குரங்குகளின் பாதிப்பு ஊர்களில் மிகுதியாக இருப்பதனால், அவை வன விலங்குத் துறைக்குச் சேர்ந்தது என்று சொல்லும்போது, அவற்றை அந்த ஊர்களில் இருந்தும், கிராமங்களில் இருந்தும் அப்புறப்படுத்த ஏற்பாடு செய்ய முடியுமா ?

Mr. SPEAKER : Is it a question ? Do you believe that it is a question ?

THIRU D. C. VIJAYENDRAIAH : Pardon me, Sir.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பது பாம்புகளைப் பற்றிய கேள்வி பதில். குரங்குகளைப் பற்றியது அல்ல. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீட்சிதர் அவர்களை ஒவ்வொரு கேள்விக்கும் வினா எழுப்புவதற்கு அனுமதிக்க வேண்டும் என்பது முறையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) பாம்புக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு என்பதை அறியலாமா ? (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே எங்கள் ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் பெருமாள் ஆலயத்தில் 5 தலை நாகத்தின்மீது படுத்துக் கொண்டிருப்பார். அவர் தலைமீது அது படம் எடுத்துக் கொண்டு அலங்கரித்துக் கொண்டிருக்கிறது..

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்தப் பாம்புத் தோலை நிச்சயமாக உரிக்க மாட்டார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலும் வெங்கடேசுவர தீட்சிதர் அவர்களுக்குத் தெரிந்தது கண்டிப்பாகத் தமிழ்க் குடிமகனுக்கும் தெரிந்தே இருக்க வேண்டும்.